# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்

## 21.09.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

*இந்த வசனத்தின் பொருள்: அல்லாஹ்வும் அவனது மலக்குகளும் ரஸூலின் மீது ரஹ்மத்தை இறக்குகின்றனர். நம்பிக்கை கொண்டவர்களே! நீங்களும் இந்த ரஸூலின் மீது அதிகமதிகம் ஸலவாத் ஓதுங்கள்.*

*அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலுக்கு துன்பத்தை கொடுப்பவர்களுக்கு அல்லாஹ் இவ்வுலகிலும் சாபத்தை மறுமையிலும் போட்டுள்ளான். இழிவான தண்டனையையும் அவர்களுக்காக தயார் செய்து வைத்துள்ளான். (33:57-58)*

இன்றைய நாட்களில் உலகின் முஸ்லிம் நாடுகளிலும், உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் முஸ்லிம்களின் மத்தியிலும் இஸ்லாத்தின் எதிரிகள் செய்த மிகவும் வெறுக்கத்தக்க, அறுவறுப்பான, கீழ்த்தரமான, அநியாயமான செயலின் காரணமாக கடுமையான மனவருத்தம் மற்றும் கோபத்தின் அலைகள் ஏற்பட்டுள்ளன. இந்த வருத்தம் மற்றும் கோபத்தை வெளிப்படுத்தும் உரிமை நிச்சயமாக முஸ்லிம்களுக்கு உள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அந்தஸ்து என்ன என்பதைப் பற்றி ஒரு முஸ்லிம் சரியாக தெரிந்திருந்தாலும், தெரிந்திருக்காவிட்டாலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்ணியத்திற்கு நிந்தனை செய்யப்படும் போது அதற்காக உயிரையும் விட தயாராகி விடுகின்றார்.

இஸ்லாத்தின் எதிரிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி கீழ்த்தரமான ஒரு திரைப்படம் – ஃபிலிம் தயாரித்துள்ளார்கள். இவ்வாறு அநியாயமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை இழிவுபடுத்தும் வகையில் செய்யப்பட்டுள்ளது. இதற்காக ஒவ்வொரு முஸ்லிமின் மனவருத்தமும் கோபமும் தூண்டப்படுவது போன்றவை இயற்கையான விளைவு தான். மனித குலத்தின் மீது கருணை காட்டுபவரும், அகில உலகங்களுக்கும் கருணையுடையவரும் மற்றும் அல்லாஹ்வின் அன்பிற்குரியவருமான ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், தமது இரவுகளையும் படைப்பினங்களுக்காக கவலை கொண்டவராக கண் விழித்தவாறு கழித்தார்கள். படைப்பினங்கள் அழிவிலிருந்து தப்பிப்பதற்காக தமது உயிரின் வேதனையை வெளிப்படுத்தினார்கள். தம்மை கவலையில் ஆழ்த்திக் கொண்டார்கள். இதனால் அர்ஷின் இறைவன் அவர்களைப் பார்த்து, 'இம்மக்கள் தம்மை படைத்த இறைவனை அடையாளம் கண்டு கொள்ளவில்லை என்பதற்காக கவலைப்பட்டு நீர் உம்மையே மாய்த்துக் கொள்வீரா!' என்றான்.

இப்படிப்பட்ட மகத்தான மனிதகுல பேருபகாரியைப் பற்றி, இழிவுகளால் நிறைந்த ஒரு படத்தை பார்த்து நிச்சயமாக ஒரு முஸ்லிமின் உள்ளம் இரத்தம் சிந்தவே செய்கிறது. எல்லாரையும் விட அதிகமாக ஓர் அஹ்மதி முஸ்லிமுக்கு கஷ்டம் ஏற்பட்டுள்ளது. நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மைப் பேரன்பர், உண்மையான அடிமையை ஏற்றுக் கொண்டவர்களைச் சார்ந்தவராவோம். அவர்கள் நமக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய மகத்தான அந்தஸ்தைப் புரியும் திறனை வழங்கியுள்ளார்கள். எனவே நமது உள்ளம் அந்த செயலின்படியே நடக்க வேண்டும். நமது ஈரல் துண்டு துண்டாகிறது. இந்த அநியாயக்காரர்களை பழிவாங்குவாயாக! என்று கூறியவாறு நாம் இறைவனது சன்னிதானத்தில் ஸஜ்தாவில் விழுகிறோம். இவர்களை படிப்பினைக்குரிய அடையாளமாக்குவாயாக! உலகம் இருக்கும் வரை இதை மக்களுக்கு ஒரு படிப்பினையாக்குவாயாக! நமக்கு காலத்தின் இமாம், ரஸூல் (ஸல்) அவர்கள் மீது எந்த அளவுக்கு பேரன்பு கொள்ள வேண்டும் என்று இவ்வாறு புரிய வைத்துள்ளார்கள். காட்டிலுள்ள பாம்புகள் மற்றும் விலங்குகளுடன் கூட சமாதானம் செய்து கொள்ள முடியும். ஆனால் நமது எஜமானரும் தலைவருமான ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்கள் மீது நிந்தனை செய்து அதில் நிலைத்திருப்பவர்களுடன் நாம் சமாதானம் செய்து கொள்ள முடியாது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

முஸ்லிம்கள் எத்தகைய சமுதாயம் எனில், ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்களின் கண்ணியத்திற்காக உயிரையும் தருபவர்களாவர். இரவும் பகலும் ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்களை ஏசுவதையே தொழிலாக கொண்டிருப்பவர்களுடன் அன்பு பாராட்டி, நட்பு பாராட்டுகிற இழிவை விட செத்து விடுவதை பெரிதாகக் கருதக்கூடியவர்களாவர்.

தமது பத்திரிகைகள், நூல்களில் அவமரியாதையாக அவர்களைப் பற்றி குறிப்பிடுகிறார்கள். மிகவும் அசுத்தமான வார்த்தையால் நினைவு கூறுகின்றனர்.

கூறுகின்றார்கள்: நினைவில் கொள்ளுங்கள்! அத்தகைய மக்கள் தமது சமுதாயத்திற்கும் நலம் விரும்புபவர்கள் அல்லர். ஏனெனில் அவர்கள் நல்ல பாதையில் முட்களைப் பரப்பக்கூடியவர்களாவர். நான் உண்மையாகவே கூறுகின்றேன். காட்டிலுள்ள பாம்புகள், வன மிருகங்களுடன் கூட சமாதானம் செய்து கொள்வது சாத்தியமாகும். ஆனால் இறைவனின் தூய நபிமார்களைப் பற்றி தீய வார்த்தைகளைப் பேசுவதிலிருந்து திரும்பாதவர்களுடன் சமாதானமாக போவது சாத்தியமற்றதாகும். ஏச்சுப்பேச்சுகள் தீய வார்த்தைகளில் வெற்றி இருப்பதாக நினைக்கின்றனர். ஆனால் ஒவ்வொரு வெற்றியும் வானத்திலிருந்து வருகிறது.

கூறுகின்றார்கள்: தூய வார்த்தைகளை உடைய மக்கள் தமது தூய வார்த்தைகளின் பரக்கத்தால் இறுதியில் உள்ளங்களை வெற்றி கொள்கிறார்கள். ஆனால் அசுத்தமான இயல்புடைய மக்கள் நாட்டில் குழப்பம் ஏற்படுத்தும் வகையில் பிரிவினையை உருவாக்குவதைத் தவிர வேறெதுவும் செய்வதில்லை.

கூறுகின்றார்கள்: அனுபவம் நமக்கு தரும் சாட்சியாவது இத்தகைய தீய இயல்பு உள்ளவர்களின் முடிவு நல்லதாக இருப்பதில்லை. இறைவனின் ரோஷம் இறுதியில் தன் அன்பிற்குரியவர்களுக்காக தனது வேலையைக் காட்டுகிறது. இக்காலத்தில் செய்தித்தாள்கள் பத்திரிகைகள் மற்றும் மற்ற ஊடகங்களும் இதற்காக பயன்படுத்தப்படுகின்றன. பிடிவாதத்தால் இவர்கள் இறைவனுடன் மோதுகின்றார்கள். இன்ஷா அல்லாஹ் இவர்கள், இறைவனின் பிடியில் விரைவில் வருவார்கள். இவர்கள் இந்த ஏளனம் செய்யும் வேலையில் பிடிவாதமாக நிற்கிறார்கள்.

2006-ல் டென்மார்க்கின் தீய இயல்பு கொண்டவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பற்றி வீணான ஒரு படத்தை சித்தரித்தார்கள். அப்போது நான் ஜமாஅத்திற்கு ஒரு எதிர்நடவடிக்கை குறித்து கவனமூட்டியிருந்தேன். அதில் கூறியிருந்தேன். இந்த அநீதியிழைப்போர் முன்னரும் உருவாகினர். இத்துடன் முடியப் போவதில்லை. முஸ்லிம்களின் தரப்பில் செய்யப்படுகின்ற ஆர்ப்பாட்டங்களால், இத்தகைய நடவடிக்கைகளால் எந்த நல்ல விளைவும், மாற்றமும் ஏற்படப் போவதில்லை. இன்னும் சொல்வதாயின், வருங்காலத்திலும் இம்மக்கள் இந்த வேலையை செய்து கொண்டுதான் இருப்பார்கள் என்று நான் கூறினேன். அதனை விட அதிகமாகவே இம்மக்கள் இந்த அநியாயத்தில் இறங்கியுள்ளதை பார்க்கிறோம். அன்றிலிருந்து இவர்களது செயல் அதிகரித்துக் கொண்டே தான் செல்கிறது. இது இஸ்லாத்திற்கு எதிராக இவர்களுக்கு கிடைத்திருக்கும் பெரும் தோல்வி ஆகும். அந்த தோல்வியே இவர்களை கருத்து சுதந்திரம் என்ற பெயரில் இப்படியெல்லாம் செய்யத் தூண்டுகிறது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று, நினைவில் கொள்ளுங்கள்! இம்மக்கள் தமது சமுதாயத்திற்கும்கூட நலம் விரும்பிகளல்லர். இவ்விசயம் ஒருநாள் அந்த சமுதாய மக்களிடமே வெட்ட வெளிச்சமாகும்; தெளிவாகும். இவர்கள் இன்று செய்கின்ற வீணான செயல்கள் அவர்தம் சமுதாயத்திற்கே நஷ்டம் தருபவையாகும். இவர்கள் சுயநலவாதிகளும் அநீதியிழைப்பவர்களுமாவர்.

அவர்கள் தமது விருப்பத்தை நிறைவேற்றுவதை விட வேறு எந்த குறிக்கோளும் அவர்களுக்கு இல்லை. இப்போது கருத்து சுதந்திரம் என்ற பெயரில் அரசியல்வாதிகளும் மற்ற துறையினரும் அவ்வப்போது மிகவும் வெளிப்படையாகவும் சிலநேரம் மறைமுகமாகவும் அவர்களுக்கு சாதகமாக பேசுகின்றனர். சிலவேளை முஸ்லிம்களுக்கு சாதகமாக பேசுகின்றனர். ஆனால் நினைவில் கொள்ளுங்கள்! உலகம்

எத்தகைய சர்வதேச கிராமமாக (Global Village) ஆகி விட்டது எனில் இந்த வார்த்தைகள் இவர்கள் நாட்டின் அமைதிக்கே பங்கம் விளைவிக்கும். பகிரங்கமாக தீயதை தீயது என்று கூறாவிட்டால் இதுவே ஏற்படும். இறைவனின் பிரம்பு செயல்படத் தொடங்கும் என்பது வேறு விசயம். காலத்தின் இமாமின் வார்த்தையை நினைவில் கொள்ளுங்கள். ஒவ்வொரு வெற்றியும் வானத்திலிருந்து வருகிறது. வானமே ஒரு தீர்ப்பை வழங்கியுள்ளது. நீங்கள் எந்த ரஸூலை நிந்திக்கின்றீர்களோ அவர்தான் உலகில் வெற்றி பெறப்போகிறார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுவது போன்று அந்த வெற்றி உள்ளங்களை வெற்றி கொள்வதால் வரப்போகிறது. ஏனெனில் தூய வார்த்தைக்கு ஒரு தாக்கம் உள்ளது. தூய வார்த்தைக்கு பகரமாக கடுமையைப் பயன்படுத்த தேவையில்லை. தீய வார்த்தைக்கு தீய வார்த்தையால் பதில் சொல்ல வேண்டிய தேவையில்லை. தீய சொற்கள், தீய செயல்களை இவர்கள் தொடங்கியுள்ளார்கள். இது விரைவில் முடிந்து விடும். பிறகு இந்த வாழ்வுக்குப் பிறகு இறைவன் இம்மக்களை பார்த்துக் கொள்வான்.

நான் ஓதிய திருக்குர்ஆன் வசனத்தில் இறைவன் மூஃமின்களுக்கு அவர்களது பொறுப்புகளின் பக்கம் கவனமூட்டியுள்ளான். உங்கள் வேலை இந்த ரஸூலின் மீது தரூதும் ஸலாமும் ஓதுவதாகும். இம்மக்களின் தீய வார்த்தைகள், அநீதிகள், எள்ளிநகையாடல்கள் மூலம் அந்த மகத்தான நபியின் கண்ணியத்திற்கு எந்தப் பங்கமும் ஏற்படாது. அவர்கள் எத்தகைய மகத்தான நபி எனில் அவர்கள் மீது இறைவனும் அவனது மலக்குகளும் கூட தரூது ஓதுகின்றனர். மூஃமின்களின் வேலை தமது நாவுகளை இந்த நபியின் மீது ஸலவாத் ஓதுவதன் மூலம் நனைத்துக் கொண்டிருக்க வேண்டும். எதிரிகள் வீணான செயல்களில் ஈடுபட ஈடுபாட நாம் முன்னரை விட அதிகமாக தரூது, ஸலவாத் ஓத வேண்டும். அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லய்த்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்னக்க ஹமீதும் மஜீத். அல்லாஹும்ம பாரிக் அலா முஹம்மதின் கமா பாரக்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்னக்க ஹமீதும் மஜீத்.

இந்த தரூது தான், இந்த நபிதான் உலகில் வெற்றி பெறுவார்கள் என்று முடிவாகி விட்டது. ஓர் அஹ்மதி முஸ்லிம் இந்த வீணான வார்த்தைகள் மீது தமது வெறுப்பையும் வேதனையையும் வெளிப்படுத்தும் விதமாக, இந்த நாடுகளிலும் கூட அந்நாட்டின் முக்கிய பிரமுகர்கள் அரசியல்வாதிகளிடம் இந்த வீணான காரியத்தை தடுப்பதற்காக கவனமூட்ட வேண்டும். உலகரீதியாகவும் ஓர் அஹ்மதி இந்த சதிக்கு எதிராக உண்மையை உலகிற்கு உணர்த்த வேண்டும்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது வாழ்வின் அழகிய அம்சத்தை எடுத்துக் காட்டுங்கள். அவர்களின் அழகிய முன்மாதிரியை ஒவ்வொரு செயலிலும் வெளிப்படுத்தி அவர்களின் அழகிய முன்மாதிரியின் அசல் படமாக ஆகிக் காட்டுங்கள். ஆம்! நான் ஏற்கனவே கூறியது போன்று அத்துடன் முன்பை விட அதிகமாக தரூது ஓதுங்கள். ஆண்கள், பெண்கள், வாலிபர்கள், வயோதியர்கள், குழந்தைகள் தமது சுற்றுப்புறத்தை தரூது மற்றும் ஸலாத்தால் நிரப்புங்கள். தமது செயல்களை இஸ்லாமிய போதனையின் முன்மாதிரியாக்குங்கள். இதுவே அழகிய எதிர்நடவடிக்கை ஆகும். இதனையே நாம் செய்து காட்ட வேண்டும். இந்த அநீதியிழைப்பவர்களின் முடிவைப் பற்றி இறைவன் இரண்டாவது வசனத்தில் கூறுகின்றான்.

ரஸூலுக்கு அவமானம் ஏற்படுத்த விரும்புபவரை, ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களை இழிவுபடுத்த விரும்புபவரை, இக்காலத்தில் உண்மையான மூஃமின்களின் உள்ளத்தை வேதனைப்படுத்தி சல்லடை ஆக்குபவர்களை இறைவன் தானே பார்த்துக் கொள்வான். இவ்வுலகிலும் அல்லாஹ்வின் சாபம் அவர்கள் மீது இறங்குகிறது. இந்த சாபத்தின் காரணமாக அவர்கள் இன்னும் அதிகமாக அசுத்தத்தில் மூழ்கி விடுவர். மரணத்திற்குப் பிறகு அத்தகையோருக்கு இறைவன் இழிவுபடுத்தும் தண்டனையை நிர்ணயித்துள்ளான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இக்கருத்தைத்தான் கூறினார்கள். அத்தகைய தீய நாவுகளைக் கொண்டவர்களின் முடிவு நன்றாக இருக்காது. எனவே இம்மக்கள் தமது முடிவை அடைவர். இவ்வுலகில் இறை சாபத்தின் வடிவிலும் மரணத்திற்குப் பிறகு இழிவுதரும் தண்டனை என்ற வடிவிலும் கிடைக்கும்.

முஸ்லிம்கள் – மற்ற முஸ்லிம்கள் கூட இறைவனின் போதனைக்கேற்ப எதிர்நடவடிக்கை எடுக்க வேண்டும். தமது நாடு, தமது வட்டம் ஆகியவற்றை தஒதினால் நிரப்புங்கள். இதுவே எதிர்நடவடிக்கையாகும். உங்கள் நாட்டில் உங்கள் சொத்துகளுக்கே நெருப்பு வைப்பது பயனற்ற எதிர்நடவடிக்கையாகும். அல்லது சொந்த நாட்டின் குடிமக்களை கொல்வது அல்லது கலவரம் செய்வதால் காவல்துறையினர் தமது நாட்டு மக்களின் மீதே துப்பாக்கிச்சூடு செய்ய வேண்டியது வருகிறது. இதனால் நமது மக்களே மரணிக்கின்றனர். பத்திரிகைகள், ஊடகங்கள் மூலம் வருகிற செய்திகள் மூலம் தெரிய வருவதாவது, பெரும்பாலான நல்ல இயல்புள்ள மேற்கத்திய மக்கள் இந்த செயலுக்காக தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர். வெறுப்பை வெளிப்படுத்தியுள்ளனர். முஸ்லிமல்லாத நிலையிலும் இயல்பில் நேர்மை உள்ள மக்கள் இதனை விரும்பவில்லை.

அமெரிக்காவிலும் இங்கும் இது நடந்துள்ளது. ஆனால் தலைமைப் பொறுப்பில் இருப்பவர்கள் ஒருபுறம் இது தவறு என்று கூறுகின்றனர். மறுபுறம் கருத்து சுதந்திரம் என்ற சாக்கில் இதற்கு ஆதரவும் தருகின்றனர். இந்த இரட்டை செயல்முறை சரியல்ல. பேச்சு அல்லது கருத்து சுதந்திரம் குறித்த சட்டம் என்பது திருக்குர்ஆனின் வார்த்தைகள் அல்ல. நான் அமெரிக்காவின் அரசியல்வாதிகளுக்கு இதனையே கூறினேன். உலகவாதிகளால் உருவாக்கப்பட்ட சட்டத்தில் பிழை ஏற்படலாம்; தவறு ஏற்படலாம். சட்டம் இயற்றும் போது ஓர் அங்கத்தை கவனிக்காமல் விட்டு விடலாம். ஏனெனில் மனிதன் மறைவானவற்றை அறிய முடியாது. ஆனால் அல்லாஹ்வோ ஆலிமுல் கைப்– மறைவானவற்றை அறிபவன் ஆவான். அவனால் உருவாக்கப்பட்ட சட்டத்தில் பிழை ஏதும் கிடையாது.

எனவே உங்கள் சட்டத்தை மாற்றத் தகாத அத்தகைய முழுமையான சட்டம் என்று கருதாதீர்கள். கருத்து சுதந்திரமுடைய சட்டமும் உள்ளதுதான். ஆனால் எந்த நாட்டின் சட்டத்திலும், UNO –ன் சட்டத்திலும் மற்றவரின் மார்க்க உணர்வை காயப்படுத்த ஒருவருக்கு உரிமை உண்டு என்று எந்த சட்டத்திலும் இல்லை. மற்ற மார்க்கப் பெரியவரை கேலி கிண்டல் செய்ய உரிமை உள்ளது என்று எங்கும் இல்லை. இதனால் உலகின் அமைதி அழிகிறது. இதனால் வெறுப்பு வளர்கிறது. இதனால் நாடுகள், மார்க்கங்களுக்கிடையில் விரிசல் அதிகரிக்கின்றது.

ஒவ்வொரு தனி நபரின் சுதந்திரத்தை கருத்தில் கொண்டு கருத்துரிமை அல்லது பேச்சுரிமை சட்டம் இயற்றப்பட்டுள்ளது. அது மிகச் சரிதான். ஆனால் அந்த வேளையில் பிறருடைய உணர்வுகளைப் புண்படுத்துவதற்கு எதிராக எந்த சட்டமும் இல்லை. UNO –வும் கூட இதனால் தான் செயலற்றுப் போய்க் கொண்டிருக்கிறது. செயலிழந்த சட்டத்தை உருவாக்கி விட்டு நாம் பெரிய வேலை செய்து விட்டோம் என்று கருதுகின்றனர். ஆனால் அல்லாஹ்வுடைய சட்டத்தை கவனியுங்கள்.

அல்லாஹ் கூறுகின்றான்: மற்றவர்களின் சிலைகளைக் கூட ஏசாதீர்கள். இதனால் சமுதாயத்தின் அமைதிக்கு பங்கம் ஏற்படுகிறது. நீங்கள் சிலைகளை ஏசினால் அவர்கள் அறியாமல் எல்லா வல்லமையும் உள்ள உங்கள் அல்லாஹ்வை நோக்கி தகாத வார்த்தைகளைக் கூறுவார்கள். இதனால் உங்கள் உள்ளம் சங்கடப்படும். உள்ளத்தில் காழ்ப்புணர்ச்சி அதிகரிக்கும். சண்டை சச்சரவுகள் ஏற்படும். நாட்டில் குழப்பம் ஏற்படும். எனவே இதுவே அழகிய போதனையாகும்.

இஸ்லாத்தின் இறைவன் இந்த போதனையைத்தான் தந்துள்ளான்; இந்த உலகின் இறைவன் தந்துள்ளான்; இந்த பிரபஞ்சத்தின் இறைவன் தந்துள்ளான். தனது அன்பிற்குரிய ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களை உலகை சீர்திருத்துவதற்காகவும், உலகில் அன்பையும் நேசத்தையும் நிலைநாட்டுவதற்காகவும் முழுமையான போதனையுடன் அந்த போதனையைத் தரக்கூடிய இறைவன் வழங்கியுள்ளான். அவன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு ரஹ்மத்துல் லில் ஆலமீன் என்ற பட்டத்தை வழங்கி எல்லா படைப்பினங்களுக்கும் ரஹ்மத் ஆக்கி அனுப்பினான்.

எனவே உலகின் கல்வியாளர்கள், ஆட்சியாளர்கள், அரசியல்வாதிகள் ஆகியோர் சிந்தியுங்கள். இந்த சில வீணர்களை தடுத்து அடக்காமல் நீங்கள் இந்தக் குழப்பத்தில் பங்கு பெறுகிறீர்களா? உலகின் பொதுமக்கள் சிந்திக்க வேண்டும். மற்றவரின் மார்க்க உணர்வுடன் விளையாடி, உலகின் புழுக்கள் போன்று அசுத்தமான மக்களுடன் சேர்ந்து அவர்களுக்கு ஆமாம் போட்டுக் கொண்டு, நீங்களும் உலக அமைதிக்கு குந்தகம் விளைவிப்பதில் பங்குதாரர் ஆகப் போகிறீர்களா?

நாம் அஹ்மதி முஸ்லிம்கள் உலகிற்கு தொண்டாற்ற எந்த வாய்ப்பையும் விட மாட்டோம். கடந்த வருடம் அமெரிக்காவில் இரத்தத்தின் தேவை ஏற்பட்ட போது, 12000 பாட்டில்களை அஹ்மதிகள் சேர்த்துக் கொடுத்தனர். இவ்வருடமும் சேகரித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் நான் கூறினேன். அஹ்மதி முஸ்லிம்களாகிய நாங்கள் வாழ்வு தருவதற்காக இரத்தம் தருகிறோம். நீங்கள் இந்த உங்கள் நடவடிக்கையில் இவ்வாறு செய்பவர்களுக்கு ஆமாம் போட்டுக் கொண்டு எங்களது உள்ளத்தின் இரத்தத்தை சிந்தச் செய்கிறீர்களா? இதுவே ஓர் அஹ்மதி முஸ்லிம் செயல் ஆகும். ஓர் உண்மையான முஸ்லிமின் செயலும் ஆகும்.

நாம் நீதியை நிலைநாட்டுபவர்கள் என்று இம்மக்கள் கருதிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் ஒரு பிரிவினரின் செயல் இதுவாகும். முஸ்லிம்களின் மீது, அவர்கள் தவறு செய்கிறார்கள் என்று குற்றம் சாட்டப்படுகிறது. சரிதான். சில எதிர்நடவடிக்கைகள் தவறுதான். உடைத்து நொறுக்குதல், தீயிட்டு கொளுத்துதல், அப்பாவி மக்களை கொல்லுதல், அந்நிய நாட்டு தூதுவர்களை பாதுகாக்காமல் இருப்பது, அவர்களைக் கொல்வது, அடிப்பது ஆகிய அனைத்தும் தவறுதான். ஆனால் அல்லாஹ்வுடைய மாசற்ற நபியை ஏளனம் செய்வது, தீய வார்த்தைகளால் பேசுவது இதுவும் பாவமாகும். ஒருவரைப் பார்த்து இன்னொருவர் என கடந்த நாட்களில் பிரான்ஸில் ஒரு பத்திரிகைக்கும் இந்த துணிச்சல் வந்தது. அதுவும் ஒரு வீணான கார்ட்டூன் ஒன்றை வெளியிட்டுள்ளது. இதுவும் முன்பை விட மோசமான வீண் செயலாகும். இந்த உலகவாதிகள், உலகமே எல்லாம் என்று கருதுகின்றனர். ஆனால் இந்த உலகம் தான் இவர்களின் அழிவுக்கும் காரணமாகும் என்று இவர்கள் அறியவில்லை.

மேலும் உலகில் பெரும் பரப்பளவில் முஸ்லிம் ஆட்சிகள் நிறுவப்பட்டுள்ளன. பெரும்பாலான முஸ்லிம் நாடுகளுக்கு இறைவன் இயற்கை வளங்களை வழங்கியுள்ளான். முஸ்லிம் நாடுகள் UNO –ல் அங்கமும் வகிக்கின்றன. திருக்குர்ஆன் முழுமை பெற்ற வேதமாக விளங்குகிறது. இதனை ஒப்புக் கொண்டவர்கள் அதனைப் படிப்பவர்கள் இந்த அழகிய போதனையை உலகின் எல்லாப் புறத்திலும் வெளிப்படுத்துவதற்கு இந்த முஸ்லிம் அரசுகள் ஏன் முயலவில்லை? ஏன் இதனை செய்வதில்லை? மார்க்க உணர்வுடன் விளையாடுவது, நபிமார்களை அவமரியாதை செய்வது, அதற்கு முயலுவதும் கூட திருக்குர்ஆனின் போதனைக்கேற்ப குற்றச்செயல் ஆகும் என்று ஏன் உலகின் முன் எடுத்து வைக்க முயலுவதில்லை. அது மிகப்பெரிய பாவமாகும். உலகின் அமைதிக்கு இவ்விசயத்தையும் UNO –ல் ஓர் அங்கமாக ஆக்க வேண்டும். அதன் உறுப்பு நாடுகள், தனது எந்த குடிமகனுக்கும் மற்றவரின் மார்க்க உணர்வுடன் விளையாட அனுமதிக்கக் கூடாது. கருத்து சுதந்திரம் என்ற பெயரில் உலகின் அமைதிக்கு குந்தகம் விளைவிக்க அனுமதிக்கப்படாது என்று சட்டம் இயற்ற வேண்டும்.

ஆனால் அந்தோ பரிதாபம்! எவ்வளவு நாட்களாக இவையெல்லாம் நடந்து கொண்டிருக்கிறது? ஒருபோதும் முஸ்லிம்களிடம் ஒருமித்த திட்டம் இல்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) மற்றும் பிற எல்லா நபிமார்கள் குறித்தும் அவர்களின் கண்ணியத்தை சீர்குலைக்கும் செயல் குறித்தும் உலகை எச்சரிக்க வேண்டும். உலக நாடுகள் அனைத்தையும் இதனை ஏற்கச் செய்ய வேண்டும். UNO –ன் பிற தீர்ப்புகள் போன்று இதுவும் செயல்படப் போவதில்லை. முந்தைய எந்த சட்டத்தின்படி செயல் நடைபெறுகிறது? ஆனால் குறைந்தபட்சம் இவ்விசயம் ரிக்கார்டில் வந்து விடும். O.I.C - Organisation of Islamic Countries என்ற அமைப்பு உள்ளது. இதன் மூலமாக ஒருபோதும் முஸ்லிம் மக்களுக்காக எந்த ஆக்கப்பூர்வமான முயற்சியும் எடுக்கப்படவே இல்லை. உலகில் முஸ்லிம்களின் மதிப்பு நிலைபெறத்தக்க எந்த முயற்சியும் நடக்கவில்லை. முஸ்லிம் நாடுகளின் அரசியல்வாதிகள் தமது விருப்பத்தை நிறைவேற்றுவத்காக ஒவ்வொரு முயற்சியும் செய்து கொண்டிருக்கிறார்கள். மார்க்கத்தின் மகத்துவம் பற்றிய கவனம் இல்லை. நமது லீடர்கள் தரப்பிலிருந்து தொடர்ச்சியான முயற்சிகள் இருந்தால் பொதுமக்கள் தரப்பிலிருந்து இந்த தவறான எதிர்நடவடிக்கைகள் கூட வெளிப்பட்டு இருக்காது. உதாரணமாக, இன்று பாகிஸ்தானில் நடக்கின்ற எதிர்நடவடிக்கைகள் போன்று நடக்காமல் இருந்திருக்கும்.

நமது லீடர்கள் இந்தப் பணிக்காக நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தமது கடமையை நிறைவேற்ற முயற்சி செய்வர் என்று அவர் தெரிந்து கொள்வார். நமது நிபந்தனை என்னவென்றால், தமது தலைவர்கள், உலகின் மக்கள் மன்றத்தில் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் கண்ணியத்தை உயர்த்துவதற்கு முன்வர வேண்டும்; மற்ற அனைத்து தூதர்களின் கண்ணியத்தையும் நிலைநாட்ட வேண்டும். எந்த விதத்தில் என்றால் அதைப் பார்த்து, இவர்கள் சொல்வது சரி என்று உலகமே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பிறகு மேற்கத்திய நாட்டிலும் உலகின் ஒவ்வொரு பகுதியிலும் முஸ்லிம்களின் பெருமளவு மக்கள் உள்ளனர். வாழ்கின்றனர். உலகில் முஸ்லிம்கள் மதத்தின் அடிப்படையிலும் எண்ணிக்கையின் அடிப்படையிலும் இரண்டாவது பெரிய சக்தியாக உள்ளனர். அவர்கள் இறை கட்டளையின்படி செல்வார்கள் எனில் எல்லா நிலையிலும் இவர்களே பெரும் ஆற்றலாக மாற முடியும். இந்நிலையில் இஸ்லாமிய எதிர்ப்பு சக்திகளுக்கு உள்ளத்தினை வேதனைப்படுத்தும் இதுபோன்ற செயல்களை ஒருபோதும் இவர்களால் செய்ய முடியாது. இந்த எண்ணம் கூட வராது. எவ்வாறிருப்பினும் முஸ்லிம் அரசுகள் போக, உலகின் பல பகுதிகளில் முஸ்லிம்கள் பெரும் எண்ணிக்கையில் வாழ்கின்றனர்.

ஐரோப்பாவில் மில்லியன் கணக்கில் துருக்கியர்கள் வாழ்கின்றனர். ஐரோப்பாவின் ஒவ்வொரு நாட்டிலும் மில்லியன் கணக்கில் வாழ்கின்றனர். முழு ஐரோப்பா மட்டுமல்ல; U.S.A., U.K., கனடா என அனைத்து பகுதிகளிலும் முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் அனைவரும் முடிவு செய்து அவர்கள் தமது வாக்குரிமையை (Vote) மார்க்க நல்லிணக்கத்தைப் பேணுபவர்களுக்கே வழங்குவதாக முடிவு செய்தால், அதுவும் நாவளவில் உறுதி அளிக்காமல் செயலளவில் காட்டக்கூடிய உறுதிமொழி வழங்குபவருக்கு தம் வாக்குரிமையை தருவதாக முடிவு செய்தால், அவர்களே இதுபோன்ற வீணான ஃபிலிம் தயாரிப்பவர்களை கண்டிப்பார்கள். இந்த உலக அரசுகளிலேயே பகிரங்கமாக தமது கருத்தை வெளியிடுகிற ஒரு பிரிவு இருப்பார்கள். எனவே முஸ்லிம்கள் தமது முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்ளுங்கள். இதனால் உலகில் ஒரு புரட்சி ஏற்பட முடியும். நாட்டிற்குள் மார்க்க உணர்வுக்கு மதிப்பளிக்கும் சட்டம் வர இயலும். ஆனால் துரதிஷ்டம் இதில் கவனமில்லை.

ஒரு ஜமாஅத் கவனமூட்டினால் அதாவது அஹ்மதிய்யா ஜமாஅத் இதன் பக்கம் கவனமூட்டினால் அதனை எதிர்ப்பதற்கு உறுதியாக நிற்கிறார்கள். எதிரியின் கரத்திற்கு வலு சேர்க்கின்றனர். அல்லாஹ் முஸ்லிம் லீடர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும், உலமாக்களுக்கும் அறிவை வழங்குவானாக! அவர்கள் தமது ஆற்றலை உறுதிப்படுத்தட்டும்! தமது முக்கியத்துவத்தை உணரட்டும்! தமது போதனையின் பக்கம் கவனம் செலுத்தட்டும்!

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது வீணான ஆட்சேபனை செய்கின்ற இம்மக்கள் ஒரு ஃபிலிமை தயாரித்துள்ளார்கள் என்றால், அவர்களின் ஒழுக்கங்களை அதிலிருந்தே மதிப்பிடலாம். இதில் முக்கிய பங்கு வகிப்பவர் ஒரு எகிப்திய கிறித்தவர். இவர் அமெரிக்காவில் வசிக்கிறார். Nakoula Bassley (நகோலா பாஸ்லி) என்பது இவரது பெயராகும். இவர் கிரிமினல் பின்னணி உள்ளவர். குற்றவாளி. ஏமாற்றியதன் விளைவாக 2010-ல் இவர் சிறை சென்றவர். இரண்டாவது நபர் இந்த ஃபிலிமின் டைரக்டர். இவர் ஃபோனோகிராபி ஃபிலிம்களை தயாரிக்கும் டைரக்டர் ஆவார். இதில் நடித்த நடிகர்கள் அனைவரும் ஃபோனோகிராபி ஃபிலிம்களில் நடிப்பவர்கள் ஆவர். இதுவே இவர்களது ஒழுக்கத்தின் தரமாகும். ஃபோனோகிராபியின் எல்லைகளை மனிதன் சிந்திக்க முடியாது. எத்தகைய அசுத்தத்தில் இம்மக்கள் மூழ்கியுள்ளனர். ஆட்சேபனை செய்து கொண்டு செல்கிறார்கள். எத்தகைய மனிதர் மீது எனில், அவரது உயர் நல்லொழுக்கம் குறித்தும் தூய்மை குறித்தும் இறைவனே சாட்சி கூறியுள்ளான்.

எனவே இவ்வாறு இவர்கள் தமது செயல் மூலம் இறைவனது தண்டனையை அழைக்கிறார்கள். அழைத்துக் கொண்டு செல்கிறார்கள். அதுபோன்று இந்தப் படத்தின் ஸ்பான்ஸர் கூட இறை தண்டனையில் இருந்து தப்பிக்க முடியாது. அதில் ஒரு கிறித்தவ பாதிரியும் அடங்குவார். அவர்கள் பிரபல்யம் தேடி அவ்வப்போது திருக்குர்ஆனை எரிப்பது போன்ற வேலைகளை அமெரிக்காவில் செய்து கொண்டிருப்பவர்கள்.

அல்லாஹும்ம மஸ்ஸிக்ஹும் குல்ல முமஸ்ஸக்கின் வஸஹ்ஹிக்ஹும் தஸ்ஹீகா.

சில மீடியாக்கள் கண்டிக்க முயன்றுள்ளன. அத்துடன் அவை முஸ்லிம்களின் எதிர்நடவடிக்கையையும் சேர்த்து கண்டித்துள்ளன. தவறான எதிர்நடவடிக்கையை கண்டிக்க வேண்டியதுதான். ஆனால் இதனை ஆரம்பித்தவர் யார் என்றும் பார்க்க வேண்டும். எவ்வாறிருப்பினும் நான் ஏற்கனவே கூறியது போன்று முஸ்லிம்களின் துரதிஷ்டம் இவை அனைத்தும் முஸ்லிம்களிடம் ஒருமைப்பாடும், தலைமைத்துவமும் இல்லாததன் விளைவாகத்தான் ஏற்படுகின்றன.

ரஸூலின் மீது அன்பு இருப்பதாக வாதம் செய்தாலும் கூட மார்க்கத்தை விட்டு விலகியே உள்ளனர். வாதம் கண்டிப்பாக செய்கின்றனர். மார்க்க அறிவு சிறிதும் இல்லை. உலகரீதியாகவும் பலவீனமாகிக் கொண்டே செல்கின்றனர். எந்த முஸ்லிம் நாடும் உறுதியாக போராட்டம் நடத்தவில்லை. நடத்தினாலும் மிகவும் பலவீனமாகவே நடத்துகிறது. எந்த அளவுக்கு எனில் மீடியாக்கள் அதற்கு எந்த முக்கியத்துவமும் தரவில்லை. முஸ்லிம்கள் போராட்டங்கள் நடத்தியதாக செய்திகள் வெளி வந்தாலும் 1.8 மில்லியன் முஸ்லிம்கள் குழந்தைகளைப் போன்று எதிர்நடவடிக்கை எடுக்கின்றனர் என்று செய்தி வெளியிட்டுள்ளனர். பராமரிப்பவர் இல்லை எனில் அங்குமிங்குமே சிதறுவர். பிறகு எதிர்நடவடிக்கையும் கூட குழந்தைத்தனமாகவே இருக்கின்றன.

ஒரு விதத்தில் கேலியாக இதைச் சொன்னாலும் அது உண்மையை தெளிவுபடுத்தியுள்ளது. இப்போதாவது முஸ்லிம்கள் வெட்கப்பட வேண்டும். இறைவன் அவர்களுக்கு நல்லறிவை வழங்குவானாக! இம்மக்களின் மார்க்கக் கண்களோ குருடாக உள்ளன. இவர்களுக்கு நபிமார்களின் அந்தஸ்து தெரியாது. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடைய மதிப்பையும் கூட வீழ்த்தி விட்டு அமைதியாக இருக்கிறார்கள். முஸ்லிம்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்காக உணர்வைக் காட்டுவது குழந்தைகளின் எதிர்நடவடிக்கை போன்று தென்படும். எவ்வாறிருப்பினும் நான் கூறியதுபோன்று 2006லும் இதனை கவனமூட்டினேன். இதன் பக்கம் கவனம் செலுத்துங்கள். மிக உறுதியான ஒரு செயல்திட்டம் ஒன்றை உருவாக்குங்கள். அதன் மூலம் வருங்காலத்தில் யாருக்கும் இதுபோன்று செய்ய தைரியம் வரக்கூடாது. இன்றைய முஸ்லிம்கள் நாடுகள் கேட்டுக் கொள்ளுங்கள். அவர்கள் வரை கொண்டு சேர்க்க ஒவ்வொரு அஹ்மதியும் முயற்சி செய்ய வேண்டும். நான்கு நாட்கள் போராட்டம் நடத்தி விட்டு உட்கார்ந்து விடுவதால் இப்பிரச்சனை தீராது. இன்னொரு ஆலோசனையும் வந்தது. மக்கள் பல்வேறு ஆலோசனைகளை அனுப்பிக் கொண்டிருக்கின்றனர்.

உலகம் முழுவதும் உள்ள முஸ்லிம் வக்கீல்கள் ஒன்றுசேர்ந்து மனு கொடுக்க வேண்டும். அந்தோ முஸ்லிம் வக்கீல்கள் சர்வதேச அந்தஸ்துள்ள வக்கீல்கள் சிந்திக்க வேண்டும். இதன் சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்ய வேண்டும். அது நடக்க முடியுமா? இல்லையா? அல்லது ஒருவழியை உருவாக்குங்கள். எதுவரை இந்த வீணான காரியத்தை கண்டு இருக்க முடியும்? தமது நாட்டில் ஓர் கண்டனத்தை தெரிவித்து விட்டு அல்லது உடைத்து நொறுக்கி விட்டு அமர்ந்து விட்டால் மேற்கத்திய நாடுகளில் இதனால் எந்த விளைவும் ஏற்படாது அல்லது இதனை (ஃபிலிம்) தயாரிப்பவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. இந்த நாட்டின் அப்பாவி மக்கள் மீது தாக்குதல் தொடுப்பீர்கள் எனில், மிரட்டுவீர்கள் எனில் தூதரகங்கள் மீது தாக்குதல் தொடுப்பீர்கள் எனில் இது இஸ்லாமிய போதனைக்கு மாற்றமானதாகும். இஸ்லாம் அதற்கு அனுமதி தருவதில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது நீங்களே ஆட்சேபனை செய்வதற்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பீர்கள். எனவே கடுமை காட்டுதல் இதற்கு பதில் அல்ல. இதற்கு பதில் நான் ஏற்கனவே சொல்லி வந்ததுதான். நமது செயல்களை சீர்திருத்துவதும், மனித குலத்திற்கு ஈடேற்றம் தருகிற அந்த நபியின் மீது தரூது மற்றும் ஸலாம் ஓதுவதும், உலக முயற்சிகள் செய்வதற்காக முஸ்லிம் நாடுகள் ஒன்றுபடுவதும் ஆகும்.

மேற்கத்திய நாடுகளில் வசிப்பவர்கள் தமது வாக்குரிமை சக்தியை ஒப்புக்கொள்ளச் செய்வதும் ஆகும். எனவே ஜமாஅத் அன்பர்கள் எங்கிருந்தாலும் அவர்கள் இவ்வாறு இப்பணியைச் செய்யட்டும். மற்றவர்களையும் அதன்படி செயல்படுத்த முயற்சி செய்யுங்கள். தமது சக்தியை – இந்நாடுகளில் உள்ள மக்களின் வாக்குரிமை சக்தியை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய வாழ்வை இம்மக்கள் முன் எடுத்து வையுங்கள். இன்று கருத்து சுதந்திரம் என்ற கூச்சலிடுகின்றனர். இஸ்லாத்தில் கருத்தை சொல்வதற்கு உரிமையில்லை என்று கூச்சலிட்டு இக்கால முஸ்லிம் நாடுகளை அதற்கு உதாரணமாக தருகின்றனர். முஸ்லிம் நாடுகளிலுள்ள குடிமக்களுக்கு சுதந்திரம் கிடைக்கவில்லை என்கின்றனர். கிடைக்காவிட்டால் அது அவர்களது துர்பாக்கியமாகும்.

இஸ்லாமிய போதனையின்படி அமல் செய்யப்படவில்லை. இஸ்லாமிய போதனையுடன் அங்கு எந்த தொடர்பும் இல்லை. மக்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் தங்கு தடையின்றி பேசியது, அவர்களின் கண்ணியத்தைக் குலைத்தது போன்றவற்றைக் காட்டும் வரலாற்று சம்பவங்களைப் பார்க்கும் போது உலகில்

அதற்கு உதாரணமே கிடைக்க முடியாது. நான் சில உதாரணங்களை எடுத்து வைக்கிறேன். இது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய வள்ளல்தன்மையைக் காட்டுவதற்காக எடுத்து வைக்கப்படுகிறது. ஆனால் அந்த சம்பவங்களே தூய்மையின்மை அளவுகடந்த நிலையிலும் அதற்கெதிரில் அன்னார் காட்டிய விவேகத்தையும் எடுத்துரைக்கின்றன.

ஹஸ்ரத் ஜுபைர் பின் முதம்மிம் உடைய அறிவிப்பில் வருகிறது. ஒருமுறை அவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் இருந்தார். அன்னாருடன் இன்னும் பலர் இருந்தனர். அவர்கள் ஹுனைனிலிருந்து வந்திருந்தார்கள். காட்டரபிகள் அன்னாரை நெருக்கினர். எந்த அளவுக்கென்றால் ஒரு பேரீச்ச மரத்தை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நெருங்கி விட்டார்கள். அம்மரத்தின் முள்ளில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய சால்வை மாட்டிக் கொண்டது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நின்று விட்டார்கள். எனது சால்வையைக் கொடுங்கள். என்னிடம் இந்த காட்டிலுள்ள மரங்களின் அளவுக்கு ஒட்டகங்கள் இருந்தாலும் அதனை உங்களுக்கு பங்கிட்டு தந்திருப்பேன். அந்நிலையிலும் என்னை கருமியாகவோ, பொய்யராகவோ, கோழையாகவோ காணமாட்டீர்கள்.

இன்னொரு அறிவிப்பு ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்களுடையதாகும். நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய அருகில் இருந்தேன். அவர்கள் ஒரு கனத்த விளிம்புகளை விட சால்வை போர்த்தியிருந்தார்கள். ஒரு காட்டரபி அந்த சால்வையை வேகமாக இழுத்தார். இதனால் அந்த சால்வையின் அடையாளம் அவர்களின் கழுத்தின் அழுத்தியது. முஹம்மதே (ஸல்)! அல்லாஹ் உமக்கு வழங்கிய செல்வத்திலிருந்து எடுத்து எனக்கு இந்த இரு ஒட்டகங்கள் மீது ஏற்றி நிறைய தாருங்கள் என்று அவர் கூறினார். நீர் உம்முடைய பொருளிலிருந்தோ உமது தகப்பனாரின் பொருளிலிருந்தோ தரப் போவதில்லை. முதலில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அமைதியாக இருந்தார்கள். பிறகு கூறினார்கள்: அல்மாலு மாலுல்லாஹி வஅனா அப்தஹு – செல்வம் அல்லாஹ் உடையது. நான் அவனது அடியான் ஆவேன். எம்மை கஷ்டப்படுத்தியுள்ளீர். அதற்காக உம்மிடம் பழிவாங்கப்படும். உம்மிடம் ஏன் பழிவாங்கக் கூடாது என்றார்கள். அதற்கு அந்த ஆடு மேய்ப்பவர், நீங்கள் தீமைக்கு தீமை மூலமாக பழிவாங்கமாட்டீர்கள் என்று கூறினார். உடனே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சிரித்தார்கள். பிறகு கூறினார்கள்: ஒரு ஒட்டகத்தின் மீது சோளமும் இன்னொரு ஒட்டகத்தின் மீது பேரீத்தம் பழங்களையும் ஏற்றுங்கள் என்றார்கள்.

இதுவே அன்னாரின் பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையின் தகுதியாகும். இது தம்மவர்களுடன் காட்டியதில்லை. எதிரிகளுடன் காட்டியதாகும். இதுவே உயர் நல்லொழுக்கமாகும். அவர்கள் கொடை வள்ளலாகவும் இருந்தார்கள்; பொறுமை, சகிப்புத்தன்மை உடையவர்களாகவும் திகழ்ந்தார்கள். பரந்த மனப்பான்மை உடையவராகவும் இருந்தார்கள். இந்த ஆட்சேபனை செய்யும் அறிவிலிகள் அறிவில்லாமல் ஆட்சேபனை செய்கின்றனர். இந்த ரஹ்மத்துல் லில்ஆலமீன் மீது கடுமை இருந்தது. இன்னது இருந்தது. இன்னது இருந்தது என்கின்றனர்.

பிறகு திருக்குர்ஆன் மீது ஆட்சேபனை செய்கின்றனர். நான் பார்த்ததில்லை. மக்களையும் கேட்டேன். ஹஸ்ரத் கதீஜாவுடைய சச்சாவின் மகனாகிய வராக்கா பின் நவ்ஃபல் இடமிருந்து தான் குர்ஆனை கொண்டு வந்தார்களாம். முதல் வஹிக்குப் பிறகு அவரிடம் ஹஸ்ரத் கதீஜா அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை அழைத்துச் சென்றார்கள். அவர் தான் குர்ஆனை எழுதித் தந்தாராம். குஃப்பார்கள் செய்த ஆட்சேபனையே அல்லாஹ்வுடைய வார்த்தை என்கிறீர்கள். இது தவணை முறையில் ஏன் இறங்க வேண்டும். ஒரே முறையில் ஏன் இறங்கவில்லை என்பதுதான். பாவம் இவருக்கு முற்றிலும் தெரியவில்லை. வரலாற்றையும் இவர் அறியவில்லை. எவ்வாறிருப்பினும் இதனை தயாரித்தவர்கள் அப்படிப்பட்டவர்கள்தான். அதில் ஒரு பாதிரியும் இருந்தார். அவர் தம்மை பெரும் அறிவு படைத்தவன் என்று கருதியிருக்கிறார். அவரும் முற்றிலும் மூடராவார். வராக்கா பின் நவ்ஃபல் அந்தோ! நான் உயிருடன் இருந்தால் உமது சமுதாயம் உம்மை ஊரை விட்டு வெளியேற்றும் போது உமக்கு உதவிக்கு இருந்திருப்பேனே? என்று கூறினார். சிறிது காலத்திற்குப் பிறகு அவர் வஃபாத் ஆகி விட்டார்.

பிறகு இந்த பாதிரி நான் கூறியது போன்று முற்றிலும் அறியாதவர் ஆவார். கிழக்கத்திய மார்க்கங்களை ஆய்வு செய்கிற மேற்கத்திய ஆராய்ச்சியாளர்கள் எப்போதும் திருக்குர்ஆனின் இன்னின்ன அதிகாரங்கள் மக்காவில் இறங்கினவா? மதீனாவில் இறங்கினவா? என்று சர்ச்சை செய்வதுண்டு. ஆனால், இவர் கூறுகிறார். திருக்குர்ஆனை அவர் எழுதிக் கொடுத்து விட்டாராம்! திருக்குர்ஆன் தானே அறைகூவல் விடுக்கிறது. திருக்குர்ஆன் யாரோ எழுதித் தந்தது என்று இவர் கருதுவாரானால் தானும் அதுபோன்று ஒன்று கொண்டு வந்து காட்டட்டும். உணர்ச்சிகளை மதிப்பது பற்றி கூறுவதானால் இதிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போன்று இன்னொருவரை காட்ட முடியாது. அன்னார் எல்லா நபிமார்களை விடவும் மேலானவர் என்று தாம் அறிந்திருந்தும் யஹூதிகளின் உணர்வுகளை மதித்தவாறு, மூஸாவை விட என்னை மேன்மை ஆக்காதீர்கள் என்று கூறினார்கள்.

ஏழைகளின் உணர்வுகளை மதித்தார்கள். எந்த அளவுக்கு அவர்களை கண்ணியப்படுத்தினார்கள் எனில் ஒரு சஹாபி செல்வந்தராக இருந்தார். மற்றவர்கள் மீது தமது மேன்மையை வெளிப்படுத்திக் கொண்டிருப்பார். அவரது பேச்சை கேட்டு விட்டு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். உமது ஆற்றல் மற்றும் சக்தியினால் உமது இந்த செல்வம் உம்மிடம் கிடைத்துள்ளதாக கருதுகிறீரா? ஒருபோதும் அவ்வாறல்ல. சமுதாய ஆற்றல், பொருளின் ஆற்றல் அனைத்தும் ஏழைகள் மூலமாகவே வருகின்றன.

இன்று இக்காலத்தில் ஏழைகளின் உரிமைகளை நிலைநாட்டுவதாகவும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க முயலுபவராகவும் இந்த சுதந்திரவாதிகள் வாதம் செய்கிறார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் 1400 வருடங்களுக்கு முன்பே தொழிலாளிகளுக்கு அவர்களின் கூலியை வியர்வை உலரும் முன்பாக தந்து விடுங்கள் என்று கூறினார்கள். எங்கெல்லாம் சோதித்துப் பார்த்தாலும் அன்னார் மனித குலத்தின் பேருபகாரியாவார்கள். அதற்கு எண்ணற்ற சம்பவங்கள் உள்ளன. அதன் உயர்ந்த முன்மாதிரிகள் அவர்களிடமிருந்தே தென்படும். அதுமட்டுமல்ல. இவர்களின் ஆட்சேபனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பெண்கள் மீது அதிக பிரியம் உள்ளவர்கள் என்பதாகும். அவர்களின் திருமணங்கள் மீது ஆட்சேபனை செய்துள்ளார்கள். அல்லாஹ் இவ்வாறு கேள்விகள் எழும் என்பதனை அறிந்திருந்தான். அதனால் அவர்கள் பிரியத்தையும் வெளியில் கொண்டு வந்தார்.

அஸ்மா பின்த் நுஃமான் பின் நபி ஜோன் பற்றி வருகிறது. இவர் அரபிகளின் அழகிய பெண்களின் ஒருவராக இருந்தார். இவர் மதீனா வந்தபோது மதீனத்துப் பெண்கள் அவரை பார்த்து விட்டு எல்லாரும் புகழ்ந்தார்கள். தமது வாழ்வில் இத்தகைய அழகிய பெண்ணைப் பார்த்ததில்லை என்றனர். அப்பெண்ணின் தகப்பனாரின் விருப்பத்திற்கிணங்க அப்பெண்ணை 500 திர்ஹம் ஹக் மஹருக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் திருமணம் செய்தார்கள். அப்பெண்ணிடம் சென்ற போது அப்பெண், ‘உங்களிடமிருந்து நான் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன்’ என்று கூறினாள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இதனைக் கேட்டு கூறினார்கள். ‘நீ மிக மகத்தானவனின் அடைக்கலத்தில் வந்து விட்டாய்’ என்று கூறி வெளியில் வந்து விட்டார்கள். பிறகு ஸைத் என்ற சஹாபியிடம் கூறினார்கள். இப்பெண்ணை அவளது வீட்டினரிடம் கொண்டு விட்டு விடுங்கள். இதில் இன்னொரு விசயம் வரலாற்றில் உள்ளது. இந்த திருமணத்தின் போது தமது மகள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு திருமணம் செய்யப்பட்டதில் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர். ஆனால் திரும்பி வந்ததும் மிகவும் கோபமுற்றார்கள்; ஏசினார்கள்.

இதுவே அந்த உயரிய மனிதர்! அவர் மீது தான் பெண் சார்பான குற்றச்சாட்டு கூறப்படுகிறது. அப்பெண்ணை மனைவியாக்கியது கூட இறைவனது கட்டளையாக இருந்தது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: மனைவியும் குழந்தைகளும் இல்லையாயின் குழந்தைகளால் சோதனைகள் வந்தால் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதும், மனைவியுடன் அழகிய பரிமாற்றம் குறித்தும் எப்படி முன்மாதிரி காட்டியிருக்க முடியும்? அவர்களின் ஒவ்வொரு அமலும் இறைவனின் திருப்திக்காகவே இருந்தது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் பற்றி அபாண்டமாக கூறப்படுகிறது. அவர்கள் அன்னாருக்கு மிகவும் பிடித்தமானவராவார். வயது அடிப்படையில் தவறாக பேசப்படுகிறது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: சில இரவுகளில் முழு இரவும் அன்னார்

இறைவனுக்கு இபாதத் செய்து கொண்டிருக்க விரும்புவார்கள். அன்னார் எல்லாரையும் விட அன்பிற்குரியவர்கள் ஆவர்.

அவர்களின் மூளையில் அசுத்தம் நிரம்பியுள்ளது. பிறகு இந்த ஆட்சேபனைகளை செய்கிறார்கள். இனியும் செய்து கொண்டிருப்பார்கள். நான் ஏற்கனவே கூறி விட்டேன். இத்தகைய மக்களால் நரகத்தை நிரப்புவதாக இறைவன் முடிவு செய்து விட்டான். இம்மக்களுக்கும் சரி இவர்களுக்கு ஆதரவளிப்பவர்களும் சரி இறைவனது தண்டனைக்கு பயப்பட வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுவது போன்று இறைவன் தனது அன்பிற்குரியவர்களுக்காக மிகவும் ரோஷம் கொள்கிறான். இக்காலத்தில் அவன் தனது மஸீஹ், மஹ்தியை அனுப்பி உலகை சீர்திருத்தத்தின் பக்கம் கவனமூட்டினான். ஆனால் இவர்கள் கேலி கிண்டலிலிருந்து விலகவில்லையாயின் இறைவனது பிடியும் கடுமையானது. உலகின் ஒவ்வொரு பகுதியிலும் இன்று இயற்கை சீற்றங்கள் ஏற்படுகின்றன. எல்லா பக்கமும் அழிவு ஏற்படுகிறது. அமெரிக்காவில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. முன்னரை விட அதிகமாக வருகிறது. பொருளாதார பின்னடைவு அதிகமாகிறது. Global Warming (உலக வெப்பமாதல்) –ன் காரணத்தால் தண்ணீரில் மூழ்கிவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்த ஆபத்தால் சூழப்பட்டுள்ளது. இவ்வனைத்தையும் பார்த்து விட்டு வரம்பு மீறுவோர் இறைவன் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமாகும். கவனம் திரும்புபவர்களாக ஆக வேண்டும். ஆனால் துரதிஷ்டவசமாக இதற்கு மாற்றமாக நடைபெறுகிறது. வரம்புகளை மீற முயற்சி செய்யப்படுகிறது. காலத்தின் இமாம் எச்சரிக்கை செய்து விட்டார்கள். பகிரங்கமாக கூறி விட்டார்கள். உலகம் அன்னாரது குரலுக்கு செவிசாய்க்கவில்லை. இந்நிலையில் உலகின் ஒவ்வொரு அடியிலும் அழிவை நோக்கியே இருக்கும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தூதுச்செய்தி மீண்டும் மீண்டும் கூறப்படுகிற தூதுச் செய்தியாகும். இன்று அதனை எடுத்து வைக்கிறேன்.

கூறுகின்றார்கள்: நினைவில் கொள்ளுங்கள்! இறைவன் எனக்கு பூகம்பங்கள் பற்றி செய்தி தந்துள்ளான். நிச்சயமாக புரிந்து கொள்ளுங்கள். இந்த முன்னறிவிப்பிற்கு ஏற்ப அமெரிக்காவிலும் நிலநடுக்கம் வந்தது. ஐரோப்பாவிலும் வந்தது. மேலும் ஆசியாவின் பல்வேறு இடங்களிலும் வரும். அவற்றில் சில கியாமத்தின் முன்மாதிரியாக இருக்கும். எந்த அளவுக்கு மரணங்கள் ஏற்படும் எனில் இரத்த ஆறுகள் ஓடும். அந்த மரணத்திலிருந்து பறவைகளும் விலங்குகளும் கூட தப்பிக்க முடியாது. பூமியில் கடுமையான அழிவு ஏற்படும். மனிதன் பிறந்த நாளிலிருந்து அத்தகைய அழிவு வந்திருக்காது. பெரும்பாலான இடங்கள் தலைகீழாகி விடும். முன்னர் குடியிருப்புகள் எதுவும் இருக்கவில்லை என்பது போன்று ஆகிவிடும். அத்துடன் இன்னும் பல ஆபத்துகள் பூமியில் இருந்தும் வானத்திலிருந்தும் அபாயகரமான முறையில் இறங்கும். எந்த அளவுக்கு எனில் ஓர் அறிவாளியின் முன் ஓர் அசாதாரணமானதாக இருக்கும். எந்த தர்க்கசாஸ்திர நூல்களின் எந்தப் பக்கத்திலும் அல்லது வானியல் நூல்களிலும் இதுபற்றி தெரிந்து கொள்ள முடியாது. என்ன நடக்கப் போகிறது? என்று மனிதன் பதறி விடுவான். பலர் ஈடேற்றம் பெறுவர். பலர் அழிந்து விடுவர். அந்த நாள் அருகில் உள்ளது.

இன்னும் சொல்வதாயின், அது வாசல் அருகே இருப்பதாக பார்க்கிறேன். உலகம் கியாமத்தின் முன்மாதிரியைப் பார்க்கும். பூகம்பம் மட்டுமல்ல. இன்னும் பயங்கரமான ஆபத்துகள் வரும். சிறிது வானத்திலிருந்து வரும். சில பூமியிலிருந்து வரும். காரணம் மனிதகுலம் தன்னை படைத்தவனை வணங்குவதை விட்டு விட்டது. அவர்களது சிந்தனை குறிக்கோள் அனைத்தும் உலகிலேயே போயிருக்கலாம். என் வருகையுடன் இறைவனது கோபத்தின் மறைவான விருப்பம் மிக நீண்ட காலமாக மறைவாக இருந்த கோபம் வெளிப்படும். இறைவன் கூறுவது போன்று வமா குன்னா முஅஸ்ஸிபீன ஹத்தா நப்அஸ ரஸூலா – தவ்பா செய்பவர்கள் பாதுகாப்புப் பெறுவர். ஆபத்துகள் வரும் முன் பயப்படுபவருக்கு கருணை காட்டப்படும். இந்த பூகம்பத்திலிருந்து பாதுகாப்பாக இருப்பார்கள் என்று கருதுகிறீர்களா? அல்லது உங்கள் திட்டங்களால் உங்களைக் காப்பாற்ற முடியும் என்று கருதுகிறீர்களா? ஒருபோதும் முடியாது. மனித பணிகள் அன்றைய தினம் முடிந்து விடும்.

அமெரிக்காவில் பூகம்பங்கள் வந்தன. நம் நாடு அதிலிருந்து தப்பித்து விட்டது என்று கருதாதீர்கள். ஐரோப்பாவே! நீயும் பாதுகாப்பாக இல்லை. ஆசியாவே! நீயும் பாதுகாப்பாக இல்லை. தீபகற்பங்களில் வாழ்பவர்களே! எந்த செயற்கை கடவுளும் உங்களுக்கு உதவி செய்யமாட்டார்கள். நான் நகரங்கள் வீழ்வதையும் குடியிருப்புகள் நாசமாவதையும் பார்க்கிறேன். ஏக இறைவன் நீண்ட காலம் அமைதியாக இருந்தான். அவனது கண்களுக்கு முன்னர் வெறுக்கத்தக்க காரியங்கள் செய்யப்பட்டன. அமைதியாக இருந்தான். இப்போது அவர் கம்பீரத்துடன் தனது முகத்தைக் காட்டுவான். காதுள்ளவர்கள் கேட்கட்டும்! அந்த நேரம் தூரத்தில் இல்லை. வானத்தின் கீழ் அனைவரையும் ஒன்று சேர்க்க முயன்றேன். ஆனால் இறை நியதியில் உள்ளது நிறைவேறுவது அவசியமாக இருந்தது.

கூறினார்கள்: நூஹின் காலம் உங்கள் கண் முன்னால் தோற்றமளிக்கும். லூத்தின் பூமியின் காட்சியை நீங்களே காண்பீர்கள். இறைவன் கோபத்தில் அவசரப்பட மாட்டான். தவ்பா செய்யுங்கள். அதன் மூலம் கருணை காட்டப்படும். இறைவனை விட்டவர் மனிதனல்ல. புழு ஆவார். அவனைப் பயப்படாதவர் மரித்தவர் ஆவார். உயிருள்ளவர் அல்லர். அல்லாஹ் உலகிற்கு அறிவை வழங்குவானாக! இந்த அநீதியான வேலைகளை செய்வதிலிருந்து விலகட்டும்! நமக்கும் நமது பொறுப்புகளை நிறைவேற்றும் வாய்ப்பை தந்து கொண்டிருப்பானாக!

இப்போது நான் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இரண்டு ஜனாஸா காயிப் தொழுகை தொழவைப்பேன். இரண்டும் **ஷ**ஹீதுகளின் ஜனாஸாவாகும்.

முதல் **ஷ**ஹீது நவீது அஹ்மது சாஹிப். இவர் ஸனாவுல்லாஹ் சாஹிபின் மகன் ஆவார். இவரை 14 செப்டம்பர் 2012 அன்று கராச்சியில் **ஷ**ஹீதாக்கியுள்ளனர். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன். நவீது அஹ்மது சாஹிபின் குடும்பத்தில் இவரது தந்தைவழிப் பாட்டனார் அப்துர் கரீம் சாஹிப் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் காலத்தில் பைஅத் செய்தவர். பைஅத்திற்கு முன் அமிர்தசரஸில் இருந்தார். பைஅத்திற்கு பிறகு அவரது குடும்பம் பாகிஸ்தானில் மஹ்மூதாபாத் சிந்தில் குடியேறியது. பிறகு 1985 -ல் காதியானிற்கு மாற்றம் ஆனார். நவீது சாஹிபுடைய தந்தையார் ஸனாவுல்லாஹ் சாஹிப் 1984-ல் இறைவழியில் கைதாகும் வாய்ப்பு பெற்றார். **ஷ**ஹாதத் சம்பவம் இவ்வாறாகும். 14 செப்டம்பர் 2012 ஜுமுஆ நாளில் 22 வயதுடைய நவீத் அஹ்மது சாஹிப் தமது வீடிருந்த மேரல்டவுண் பகுதி குல்ஸன் ஹல்காவுக்கு முன்னால் தனது அஹ்மதியல்லாத இரு நண்பர்களுடன் அமர்ந்திருந்தார். அடையாளம் தெரியாத சிலர் மோட்டார் சைக்கிளில் வந்தனர். மூன்று பேரையும் துப்பாக்கிச்சூடு செய்தனர். துப்பாக்கியிலிருந்து வெளிவந்த இரு குண்டுகள் நவீது அஹ்மதின் வயிற்றில் பட்டது. மற்ற இரு இளைஞர்களுக்கும் குண்டடி பட்டது. மூன்று பேரும் காயமடைந்தார்கள். உடனே ஆஸ்பத்திரி எடுத்துச் செல்லப்பட்டார்கள். நவீத் அஹ்மது மருத்துவமனைக்கு செல்லும் வழியில் வஃபாத் ஆகி விட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன். எளிய இயல்பு உள்ளவர். மென்மையானவர். கீழ்படிபவர். தாழ்மை குணம் உள்ளவர். படிப்பில் ஆர்வம் இருந்தது. ஏழ்மையின் காரணமாக படிக்க முடியவில்லை. தமது தந்தையாருடன் சேர்ந்து பணியாற்றினார். வேலை செய்து கொண்டே மெட்ரிக் தேர்ச்சி பெற்றார். இந்த ரமலானில் கூட குத்தாமுல் அஹ்மதிய்யாவில் தம்மை டியூட்டி கொடுப்பதற்காக அர்ப்பணித்திருந்தார். நல்ல முறையில் பணியாற்றினார். வேலை செய்த இடத்திலுள்ள அதிகாரிகளும் இவரது விசுவாசம் உழைப்பு பற்றி கவரப்பட்டனர். அவரது ஜனாஸா தொழுகையில் அலுவலகத்தைச் சார்ந்த பலர் பங்கெடுத்தனர். மேலும் அவரது முதலாளி அவரது குடும்பத்தின் உறவினர்கள் இரங்கல் தெரிவிக்க வந்தனர். இவரது பெற்றோர் இருவரும் உயிருடம் உள்ளனர். இரு சகோதரர்கள் இரு சகோதரிகள் உள்ளனர்.

இரண்டாவது ஜனாஸா முஹம்மது அஹ்மது சித்திகி சாஹிப் உடையதாகும். ரியாஸ் அஹ்மது சாஹிப் சித்திகி உடைய மகன் ஆவார். **ஷ**ஹீது 15 செப்டம்பர் 2012 அதாவது அடுத்த நாளும் கராச்சியில் **ஷ**ஹாதத் நிகழ்ந்தது. கராச்சியை குறி வைத்து அதிகமான **ஷ**ஹாதத்துகள் நடக்கின்றன. கராச்சி அஹ்மதிகளை இறைவன் தனது பாதுகாப்பில் வைப்பானாக! துஆ செய்யுங்கள். இன்றைய காலத்தில் கராச்சியில் இலக்கு நிர்ணயித்து அதிகமான **ஷ**ஹாதத்துகள் செய்யப்படுகின்றன. ஆட்சியாளர்கள்

தரப்பிலிருந்தும் அதிகமாக அடக்குமுறை செய்யப்படுகின்றன. எவ்வாறிருப்பினும் எல்லா இடத்திலும் எல்லா அஹ்மதிகளையும் பாதுகாப்பில் வைப்பானாக!

முஹம்மது அஹ்மது சித்திகி சாஹிபுடைய குடும்பம் கராச்சியைச் சார்ந்தது. இம்ரான் அஹ்மது சித்திகி என்ற இவரது சகோதரர் 2001ல் அமெரிக்காவில் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தார். இம்ரான் அஹ்மது சித்திகி சாஹிபுடைய தப்லீகினால் அவரது மற்ற இரு சகோதரர்களும் பைஅத் செய்தனர். மஹர் சித்திகி ரிளுவான் சித்திகி அதன் பிறகு பெற்றோர் உட்பட குடும்பம் முழுவதும் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தது.

ஷஹாதத்தின் சம்பவம் இவ்வாறாகும். 15 செப்டம்பர் 2012 சனிக்கிழமை இரவு சுமார் 12.00 மணி அளவில் முஹம்மது அஹ்மது சித்திகி சஹிப் தமது சகோதரியின் கணவர் சம்ஸ் பக்ரி சாஹிபுடன் தமது அஸ்ஸலாம் என்ற டிபார்ட்மென்டல் ஸ்டோரை விட்டு மோட்டார் சைக்கிளில் திரும்பி வந்த போது அவர் மீது தொடர்ந்து துப்பாக்கிச்சூடு செய்யப்பட்டது. அதில் முஹம்மது அஹ்மது சித்திகி சாஹிப் மீது பட்டது. அதில் ஒன்று நெஞ்சிலம் இன்னொன்று இடுப்பிலும் பட்டது. அந்த இடத்திலேயே ஷஹீதாகி விட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

அவரது சகோதரியின் கணவர் சம்ஸ் பக்ரி சாஹிபிற்கு 5 குண்டுகள் பாய்ந்தன. அதில் ஒன்று வலது தோளில் பட்டது. மற்றது வயிற்றிலும் மற்ற குண்டுகள் கால்களிலும் பட்டன. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவர் குணமடைய துஆ செய்யுங்கள. அல்லாஹ் விரைவான முழுமையான குணமளிப்பானாக! ஷஹாதத்தின் போது ஷஹீது மர்ஹூமின் வயது 23. ஒரு வாரம் முன்பு தான் திருமணம் நடந்தது. ஷஹீத மர்ஹூம் கடந்த வருடம்தான் எம்.பி.ஏ. தேர்வில் தேர்ச்சி பெற்றார். மிகவும் கண்ணியமானவர். குற்றமற்றவர். கட்டுப்படுபவர். நல்லொழுக்கம் உள்ளவர்.

கூறுகிறார்கள்: 23 வயது இளைஞர். அழகிய தோற்றமுடையவர். தோற்றம் மட்டுமல்ல. வாழ்வும் கூட அழகானதாக இருந்தது. எப்போதும் சில துஆக்களை எழுதி பாக்கெட்டில் வைத்திருப்பார். அதனைப் படித்துக் கொண்டிருப்பார். அவரது சகோதரர் கூறுகிறார். எங்களில் அவர் மிகவும் தகுதிவாய்ந்தவராக இருந்தார். 7 செப்டம்பர் 2012 அன்று தமது மொபைலில் இருந்து SMS செய்தார். கராச்சியின் நிலை மிகவும் மோசமாக உள்ளது. நான் ஷஹீதாகி விட்டால் எனக்காக துஆ செய்யுங்கள் என்று அனுப்பி இருந்தார்.

ஷஹீது சம்பவத்தைப் பற்றி ஷஹீது மர்ஹூமுடைய தாயார் கூறுகிறார்: இரங்கல் தெரிவிக்க வந்த அஹ்மதியல்லாத உறவினர் இரங்கல் தெரிவிக்கும் வகையில் கேலியாக சொன்னார். முடிவைப் பார்த்து விட்டாயா? அதற்கு அவரது தாயார் கூறினார்கள். நாங்கள் எமது அன்பு நபி (ஸல்) அவர்களின் கட்டளையின்படி மஸீஹை ஏற்றுள்ளோம். அதற்காக யாருக்கும் பயப்படவில்லை. நான் ஜமாஅத்திற்காக 9 குழந்தைகளையும் தியாகம் செய்யத் தயாராக உள்ளேன்.

அல்லாஹ்வின் அருளால் ஷஹீதின் சகோதர சகோதரிகள் தைரியமாக உள்ளனர். ஷஹீது மர்ஹூமுடைய தந்தை முன்னரே வஃபாத் ஆகிவிட்டார். ஷஹீது மர்ஹூமின் உறவினர்களில் வயதான தாயார் தவிர 8 சகோதரர்களும் 2 சகோதரிகளும் உள்ளனர். இவர் சகோதர சகோதரிகள் அனைவரையும் விட இளையவர் ஆவார். அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக! எல்லா ஷுஹதாக்களின் தகுதியையும் உயர்த்துவானாக! பின்னால் இருப்பவர்களுக்கு பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக! பாகிஸ்தானின் ஒவ்வொரு அஹ்மதியையும் பாதுகாப்பானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
AT BAITUL FUTUH MOSQUE, LONDON.
**ON 21.09.2012**

Translated by : Muallim M. NIZAMUDDIN
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456